8 ஜனவரி 2024

ஊடக வெளியீடு

**மேதகு சான் கொன் இயோவ்**
பினாங்கு மாநில முதலமைச்சர்

**ஜனவரி 2024 திட்டமிடப்பட்ட நீர் விநியோகத் தடை (SWSI): நீர் நிரப்பப்பட்ட தண்ணீர் தொட்டிகள் நீர் விநியோகத்திற்குச் செல்லத் தயார்**

பினாங்கு, திங்கட்கிழமை, 8 ஜனவரி 2024: ஜனவரி 2024 திட்டமிடப்பட்ட நீர் விநியோகத் தடையின் போது (SWSI) பயன்படுத்தப்படும் அனைத்து 99 தண்ணீர் தொட்டிகளும் முழுமையாக தயாரிக்கப்பட்டு, பயன்படுத்தத் தயார் நிலையில் உள்ளன.

மேலும், தயார்நிலையில் இருந்த அனைத்து தண்ணீர் தொட்டிகளிலும் நீர் நிரப்பப்பட்டுள்ளது. இந்தத் தொட்டிகள் 97 தண்ணீர் தொட்டிகள் உட்பட (ஒவ்வொன்றும் 24,000லிட்டர் நீர் வரை சேமிக்கக்கூடிய 19 “Gajah Flexitanks உட்பட) மற்றும் மாநில சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழங்கிய அனைத்து தொட்டிகளும் இதில் அடங்கும்.

இது ஜனவரி SWSI ஆல் பாதிக்கப்பட்ட பயனீட்டாளர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான PBAPP இன் "அவசர" நீர் விநியோக நடவடிக்கைகள் தயாராக நிலையில் உள்ளன என்பதை சித்தரிக்கிறது. "எக்ஸிஜென்சி" என்பது "ஒரு சூழ்நிலையின் சிரமங்களை, குறிப்பாக அவசர கோரிக்கைகளை ஏற்படுத்தும்" என்பதைக் குறிக்கிறது.

590,000 பாதிக்கப்பட்ட பயனீட்டாளர்களின் "வழக்கமான தினசரி நீர் விநியோகத்தை" தயார் நிலையில் இருக்கும் இந்த அனைத்து தண்ணீர் தொட்டிகள் மற்றும் நீர் விநியோகத் தொட்டிகளால் ஈடுகட்ட முடியாது. எனவே, பாதிக்கப்பட்டப் பயனீட்டாளர்கள் நீரைப் பெற வரிசையில் நிற்க வேண்டிய சிரமத்தை எதிர்நோக்குவதற்கு மன்னிப்பு கேட்டுக்கொள்கிறோம்.

இருப்பினும், பாதிக்கப்பட்ட பயனீட்டாளர்களுக்கு தண்ணீர் தொட்டிகள் மற்றும் தொட்டிகள் ஓரளவு நிவாரணம் அளிக்கும்.

Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

**விளக்கமளிப்பு**

ஜனவரி 2024 SWSI பற்றி ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் நிறைய செய்திகள் வெளிவந்துள்ளன. பினாங்கில் உள்ள அனைத்து நீர் பயனீட்டாளர்களின் நலனுக்காக சில முக்கியமான விளக்கமளிப்பு வழங்க என்னை அனுமதிக்கவும்:

**விளக்கம் 1: PBAPP இன் தண்ணீர் தொட்டிகள் மற்றும் தொட்டிகளின் ஒதுக்கீடு, மாநில மற்றும்/அல்லது நாடாளுமன்றத் தொகுதிகளுக்கு ஏற்ப முன்னுரிமை அளிக்கப்படவில்லை.**

சில சட்டமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்கள் தொகுதிகளுக்கு சிறந்த நீர் விநியோகத்தை உறுதி செய்ய கூடுதல் தண்ணீர் தொட்டிகள் கோரியுள்ளனர். தங்களின் தொகுதிகளுக்கு முடிந்தவரை சிறந்த முறையில் சேவை செய்வதற்கான அவர்களின் உறுதிப்பாட்டை நாங்கள் புரிந்து கொண்டாலும், தண்ணீர் தொட்டிகள் மற்றும் தொட்டிகளின் "ஒதுக்கீடு" பின்வரும் 3 முதன்மை காரணிகளின் அடிப்படையில் முடிந்தவரை நியாயமாகவும் சமமாகவும் இருக்க திட்டமிடப்பட்டுள்ளது:

- தண்ணீர் தேவை மற்றும் PBAPP சேவை பகுதிகளில் உள்ள பயனீட்டாளர்களின் எண்ணிக்கை. PBAPP என்பது முழு பினாங்கு மாநிலத்திற்கும் சேவை செய்ய உரிமம் பெற்ற மாநில நீர் விநியோக வாரியம் என்பதை நினைவில் கொள்ளவும்.

- ஒட்டுமொத்த திட்டமிடப்பட்ட தண்ணீர் தொட்டிகளின் இயக்க வழிகள் மற்றும் தண்ணீர் தொட்டிகள் நிரப்பும் நிலையங்களின் இடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது

- PBAPP இன் நான்கு (4) நிலைகளில் நீர் விநியோக சேவைகள் மீட்புத் திட்டம்.

**விளக்கம் 2: இது பெரும்பாலான நீர் பயனீட்டாளருக்கு "4 நாட்களுக்கும் நீர் இல்லை" என்பது அல்ல.**

PBAPP அதன் 4-நிலை நீர் விநியோக மீட்பு திட்டத்தை வெளியிட்டுயுள்ளது. இத்திட்டத்தின்படி, பாதிக்கப்பட்ட 590,000 பயனீட்டாளர்களில் 33% பேருக்கு நீர் விநியோகம் 48 மணி நேரத்தில் மீட்கப்படும்.

PBA
Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

72 மணி நேரத்தில், பாதிக்கப்பட்ட 84% பயனீட்டாளருக்கு நீர் விநியோகிக்கப்பட வேண்டும். **அதாவது, பாதிக்கப்பட்ட பெரும்பாலான நீர் பயனீட்டாளருக்கு 3 நாட்கள் அல்லது அதற்கு முன்னதாகவே நீர் விநியோகம் வழங்கப்படும்.**

மீதமுள்ள 16% பாதிக்கப்பட்ட பயனீட்டாளருக்கு 96 மணி நேரத்தில் நீர் விநியோகம் வழங்கப்படும். நீரைப் பெறும் "கடைசி பயனீட்டாளராக" இறுதி வரிசையில் (EoL) மற்றும் உயர் நிலப் பகுதிகளில் வாழும் பயனீட்டார்களாக இருப்பார்கள்.

**விளக்கம் 3: ஜனவரி 2024 SWSI பினாங்கின் முழு மாநிலத்தையும் பாதிக்காது.**

ஊடக செய்தி வெளியீடுகள், பிரச்சூரங்கள், முகநூல் மற்றும் செய்தித்தாள் விளம்பரங்களில் ஜனவரி 2024 SWSI ஆல் பாதிக்கப்படும் பகுதிகளின் முழுப் பட்டியலையும் PBAPP வெளியிட்டுள்ளது. மேலும், PBAPP இணையதளத்திலும் முழுப் பட்டியலை பார்க்கலாம்.

பட்டியலிடப்பட்ட பகுதிகளில் உள்ள பயனீட்டாளர்கள் மட்டுமே பாதிக்கப்படுவார்கள். பாதிக்கப்பட்ட பகுதிகள் குறித்த தகவல்கள் அறிய சமூக ஊடகங்களில் சித்தரிக்கப்படும் செய்திகளைப் பார்ப்பதற்குப் பதிலாக அதிகாரப்பூர்வ அறிவிப்புகளைப் பார்க்கவும்.

**விளக்கம் 4: PBAPP உள்நாட்டு பயனீட்டாளரை விட அதன் மிகப்பெரிய வாடிக்கையாளர்களுக்கு நீர் விநியோக மீட்புக்கு முன்னுரிமை அளிக்கவில்லை.**

பணிநிறுத்தத்திற்குப் பிறகு சுங்கை டுவா WTP "மீண்டும் செயல்படும்" போது நீர் விநியோக சேவைகளை மீட்டெடுப்பதற்கான ஒரு முறையான வரிசை உள்ளது. இந்த வரிசை பினாங்கின் நீர் விநியோக உள்கட்டமைப்பு மற்றும் சுங்கை டுவா WTP இலிருந்து இருக்கும் தூரத்தை அடிப்படையாகக் கொண்டது.

நீர் விநியோக மீட்பு செயல்முறையின் முதல் கட்டத்தில், செபராங் பிறையில் உள்ள சுங்கை டுவா WTP அருகில் உள்ள பகுதிகள் மற்ற பகுதிகளை விட விரைவாக நீர் விநியோகத்தைப் பெறும். எனவே, செபராங் பிறையில் உள்ள பெரும்பாலான பகுதிகள் 12.1.2024 அன்று காலை 6.00 மணிக்குள் "மீட்கப்படும்".

Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

இரண்டாம் கட்ட மீட்சியில், பினாங்கு தீவில் உள்ள புக்கிட் டம்பார் நீர்த்தேக்கம் மற்றும் பம்பிங் நிலைய வளாகத்திற்கு அருகில் உள்ள பகுதிகளுக்கு நீர் விநியோகம் தொடங்கும். புக்கிட் டம்பார் பகுதியில் முழுமையாகச் செயல்பட்டதும், ஜார்ச்டவுன் மற்றும் தென்மேற்கு மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான பகுதிகளில் (தென் மேற்கு மாவட்டம் ) 13.1.2024 அன்று காலை 6.00 மணிக்கு "மீட்சி" பெறும்.

புக்கிட் கெடுங் மற்றும் தெலுக் கும்பார் பம்பிங் நிலையங்கள் மூலம் மூன்றாவது கட்ட மீட்பு செயல்முறைக்கு கவனம் செலுத்தப்படும். இரண்டு பம்பிங் நிலையங்களும் முழுமையாகச் செயல்பட்டவுடன், பினாங்கு தீவின் அனைத்து தெற்குப் பகுதிகளும் "மீட்கப்படும்". மேலும் 14.1.2024 அன்று காலை 6.00 மணிக்குள் 99.5% மீட்சிப் பெறும்.

மீட்சியின் நான்காவது மற்றும் இறுதி கட்டத்தில், குறிப்பிட்ட சில கட்டிடங்கள் அல்லது உயரமான நீர் தொட்டிகளில் குறைந்த பம்ப் அழுத்தம் போன்ற குறிப்பிட்ட end-of-line (EoL) மற்றும் உயரமான சுற்றுப்புறங்களில் அறியப்படும் சிக்கல்களை PBAPP சமாளிக்க வேண்டும்.

நன்றி.

---

எழுத்தாக்கம் : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
கார்ப்பரேட் தகவல் பிரிவி
மின்னஞ்சல் : syarifah@pba.com.my